No. of Printed Pages : **24**

**5957**

**B**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III
# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I/PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

**1.** பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துக்கள் _________.

(அ) முதல் (ஆ) நட்டம் (இ) இலாபம் (ஈ) ரொக்கம்

The excess of assets over liabilities is _________.

(a) capital (b) loss (c) profit (d) cash

**2.** ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை :

(அ) வருவாயின செலவு (ஆ) வருவாயின வரவு

(இ) முதலினச் செலவு (ஈ) முதலின வரவு

Donation received for a specific purpose is _________.

(a) Revenue expenditure (b) Revenue receipt

(c) Capital expenditure (d) Capital receipt

**3.** ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது :

(அ) மாதிரி (ஆ) முடிவு (இ) தீர்மானம் (ஈ) விகிதம்

The mathematical expression that provides a measure of the relationship between two figures is called _________.

(a) Model (b) Conclusion (c) Decision (d) Ratio

**4.** கீழ்வருவனவற்றில் எது சரியானது ?

(அ) உயர் இலாபம் = சராசரி இலாபம் − சாதாரண இலாபம்

(ஆ) உயர் இலாபம் = மொத்த இலாபம்/ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்

(ஈ) உயர் இலாபம் = கூட்டு இலாபம்/ஆண்டுகளின் எண்ணிக்கை

Which of the following is true ?

(a) Super profit = Average profit − Normal profit

(b) Super profit = Total profit/number of years

(c) Super profit = Average profit × years of purchase

(d) Super profit = Weighted profit/number of years

**5.** மறுமதிப்பீட்டு கணக்கு ஒரு _________.

(அ) ஆள்சார் கணக்கு (ஆ) சொத்து கணக்கு

(இ) ஆள்சாரா கணக்கு (ஈ) பெயரளவு கணக்கு

Revaluation Account is a _________.

(a) Personal Account (b) Real Account

(c) Impersonal Account (d) Nominal Account

**6.** பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது :

(அ) இருப்பாய்வு (ஆ) வழக்கமான கணக்கியல் அறிக்கை

(இ) இருப்பு நிலைக்குறிப்பு (ஈ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை

Accounting report prepared according to the requirements of the user is __________.

(a) Trial balance (b) Routine accounting report

(c) Balance sheet (d) Special purpose report

**7.** மறுமதிப்பீட்டின் போது பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது :

(அ) நட்டம் (ஆ) இலாபம்

(இ) ஆதாயம் (ஈ) மேற்கண்ட ஏதுமில்லை

On revaluation, the increase in liabilities leads to :

(a) Loss (b) Profit

(c) Gain (d) None of these

**8.** கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல ?

(அ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்.

(ஆ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்.

(இ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது.

(ஈ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

Which of the following statements is not true in relation to admission of a partner ?

(a) The firm is reconstituted under a new agreement

(b) Generally mutual rights of the partners change

(c) The existing agreement does not come to an end

(d) The profits and losses of the previous years are distributed to the old partners

**9.** கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளி களிடையே பகிர்ந்தளிக்கப்படுவது :

(அ) சமமான விகிதத்தில் (ஆ) முதல் விகிதத்தில்

(இ) (அ) மற்றும் (ஆ) (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

In the absence of a partnership deed, profits of the firm will be shared by the partners in :

(a) Equal ratio (b) Capital ratio

(c) Both (a) and (b) (d) None of these

**10.** நிதி நிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது :

(அ) குறுகிய கால தகவல்கள் (ஆ) பணம் சாரா தகவல்கள்

(இ) நீண்ட கால தகவல்கள் (ஈ) கடந்த கால தகவல்கள்

The financial statements do not exhibit :

(a) Short-term data (b) Non-monetary data

(c) Long-term data (d) Past data

**11.** அறைகலன் கடனுக்கு வாங்கியது Tally-ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும் ?

(அ) கொள்முதல் சான்றாவணம் (ஆ) பெறுதல்கள் சான்றாவணம்

(இ) செலுத்தல்கள் சான்றாவணம் (ஈ) குறிப்பேடு சான்றாவணம்

In which voucher type credit purchase of furniture is recorded in Tally ?

(a) Purchase voucher (b) Receipt voucher

(c) Payment voucher (d) Journal voucher

**12.** சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துக்கள் :

(அ) நிதி (ஆ) காப்புகள்

(இ) விரைவு சொத்துக்கள் (ஈ) புலனாகும் சொத்து

Current assets excluding inventory and prepaid expenses is called :

(a) Funds (b) Reserves

(c) Quick assets (d) Tangible assets

**13.** பின்வரும் வாக்கியங்களில் எது சரியானதல்ல ?

(அ) போக்குப் பகுப்பாய்வு என்பது ஓராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.

(ஆ) குறிப்புகள் மற்றும் பட்டியல்கள் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகின்றன.

(இ) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். பொது அளவு அடிப்படையின் சதவிகிதமாக காட்டப்படுகின்றன.

(ஈ) நிதி நிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.

Which of the following statements is not true ?

(a) Trend analysis refers to the study of movement of figures for one year.

(b) Notes and schedules also form a part of financial statements.

(c) The common-size statements show the relationship of various items with some common base, expressed as percentage of the common base.

(d) The tools of financial statement analysis include common-size statement.

**14.** முகமதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு :

(அ) பங்கு முதல் கணக்கு (ஆ) பத்திர முனைமக் கணக்கு

(இ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு (ஈ) அழைப்பு முன்பணக் கணக்கு

The amount received over and above the par value is credited to _________.

(a) Share capital account (b) Securities premium account

(c) Forfeited shares account (d) Calls in advance account

**15.** ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு :

2014 : ₹ 4,000 ; 2015 : ₹ 3,000 ; 2016 : ₹ 5,000 ; 2017 : ₹ 4,500 மற்றும் 2018 : ₹ 3,500.

5 ஆண்டுகளின் சராசரி இலாபம் _________.

(அ) ₹ 6,000 (ஆ) ₹ 12,000 (இ) ₹ 4,000 (ஈ) ₹ 5,000

The following are the profits of a firm in the last five years :

2014 : ₹ 4,000 ; 2015 : ₹ 3,000 ; 2016 : ₹ 5,000 ; 2017 : ₹ 4,500 and 2018 : ₹ 3,500.

The average profits of five years is _________.

(a) ₹ 6,000 (b) ₹ 12,000 (c) ₹ 4,000 (d) ₹ 5,000

**16.** நிலை அறிக்கை ஒரு :

(அ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு

(ஆ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை

(இ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

(ஈ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

Statement of affairs is a _________.

(a) summary of cash transactions
(b) statement of income and expenditure
(c) summary of credit transactions
(d) statement of assets and liabilities

**17.** வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது :

(அ) உபரி அல்லது பற்றாக்குறை (ஆ) லாபம் அல்லது நட்டம்

(இ) நிதி நிலை (ஈ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு

Income and Expenditure Account is prepared to find out :

(a) surplus or deficit (b) profit or loss
(c) financial position (d) cash and bank balance

**18.** ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத இறுதியிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக்கொள்ளும் போது அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக :

(அ) 12 மாதங்கள் (ஆ) 5.5 மாதங்கள் (இ) 6.5 மாதங்கள் (ஈ) 6 மாதங்கள்

When a partner withdraws regularly a fixed sum of money at the end of every month, period for which interest is to be calculated on the drawings on an average is __________.

(a) 12 months (b) 5.5 months (c) 6.5 months (d) 6 months

**19.** நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக்கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி _________ என அழைக்கப்படும்.

(அ) முதலினக் காப்பு (ஆ) அங்கீகரிக்கப்பட்ட முதல்

(இ) காப்பு முதல் (ஈ) அழைக்கப்பட்ட முதல்

That part of share capital which can be called up only on the winding up of a company is called :

(a) Capital reserve (b) Authorised capital

(c) Reserve capital (d) Called up capital

**20.** பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது ?

(அ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும் போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப் படுகிறது.

(ஆ) வெளியிடப்பட்ட பங்குமுதல் அங்கீகரிக்கப்பட்ட பங்குமுதலை விட ஒருபோதும் அதிகமாக இருக்கக்கூடாது.

(இ) செலுத்தப்பட்ட பங்குமுதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.

(ஈ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்கு முதல் ஒப்பிய பங்குமுதலை விட குறைவாக இருக்கும்.

Which of the following statement is false ?

(a) Reserve capital can be called at the time of winding up.

(b) Issued capital can never be more than the authorised capital.

(c) Paid up capital is part of called up capital.

(d) In case of under subscription, issued capital will be less than the subscribed capital.

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** நிலை அறிக்கை என்றால் என்ன ?

What is statement of affairs ?

**22.** உயில் கொடை என்றால் என்ன ?

What is legacy ?

**23.** கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹ 2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். அவர் ஒவ்வொரு மாத தொடக்கத்தில் எடுத்திருந்தால் எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கணக்கிடவும்.

Kavitha is a partner in a firm. She withdraws ₹ 2,500 p.m. regularly. Interest on drawings is charged @ 4% p.a., calculate the interest on drawings using average period, if she draws at the beginning of every month.

**24.** உயர் இலாபம் என்றால் என்ன ?
What is super profit ?

**25.** தியாக விகிதம் என்றால் என்ன ?
What is sacrificing ratio ?

**26.** கூட்டாளி விலகல் என்றால் என்ன ?
What is meant by retirement of a partner ?

**27.** அப்துல் வரையறு நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை ₹ 3 முனைமத்தில் வெளியிட்டது. அனைத்து தொகையும் விண்ணப்பத்துடன் செலுத்தப் பட்டது. குறிப்பேட்டு பதிவுகளைத் தரவும்.
Abdul Ltd, issues 50,000 equity shares of ₹ 10 each payable fully on application. Pass journal entries if shares are issued at a premium of ₹ 3 per share.

**28.** கீழ்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.
மொத்த நடப்பு பொறுப்புகள் ₹ 2,40,000; மொத்த நடப்பு சொத்துகள் ₹ 4,50,000; சரக்கிருப்பு ₹ 70,000; முன் கூட்டிச் செலுத்திய செலவுகள் ₹ 20,000.
Calculate quick ratio from the following details :
Total current liabilities ₹ 2,40,000; Total current assets ₹ 4,50,000; inventories ₹ 70,000; prepaid expenses ₹ 20,000.

**29.** தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன ?
What is automated accounting system ?

**30.** பின்வரும் விவரங்களிலிருந்து தருண் கோ நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| **விவரம்** | **2016 - 17** | **2017 - 18** |
|---|---|---|
| | ₹ | ₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | 1,25,000 |
| இதர வருமானங்கள் | 25,000 | 20,000 |
| செலவுகள் | 75,000 | 60,000 |

From the following particulars, prepare comparative income statement of Tharun Co. Ltd.

| **Particulars** | **2016 - 17** | **2017 - 18** |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Revenue from operations | 1,00,000 | 1,25,000 |
| Other income | 25,000 | 20,000 |
| Expenses | 75,000 | 60,000 |

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** பின்வரும் விவரங்களிலிருந்து அவ்வாண்டில் மேற்கொண்ட மொத்த விற்பனையை கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து ரொக்கம் பெற்றது | 4,20,000 |
| விற்பனைத் திருப்பம் | 35,000 |
| வாராக் கடன் | 15,000 |
| 2018 டிசம்பர் 31 அன்று கடனாளிகள் | 2,00,000 |
| ரொக்க விற்பனை | 4,60,000 |

From the following details find out total sales made during the year.

| Particulars | ₹ |
|---|---|
| Debtors on 1st January 2018 | 1,30,000 |
| Cash received from debtors during the year | 4,20,000 |
| Sales returns | 35,000 |
| Bad debts | 15,000 |
| Debtors on 31st December 2018 | 2,00,000 |
| Cash sales | 4,60,000 |

**32.** ஆகாஷ், பாலா, சந்துரு மற்றும் டேனியல் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்வருவனவற்றை எவ்வாறு மேற்கொள்வீர்கள் ?

(i) ஆகாஷ் அதிக முதல் வழங்கியுள்ளார். அவர் முதல்மீது வட்டி ஆண்டுக்கு 10% கோருகிறார்.

(ii) ஆகாஷ் இலாபத்தினை முதல் விகிதத்தில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்கிறார். ஆனால் பிற கூட்டாளிகள் அதனை ஒப்புக்கொள்ளவில்லை.

(iii) சந்துருவால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடன் ₹ 50,000. அவர் கடன் மீது வட்டி ஆண்டுக்கு 12% வேண்டுமென்று கோருகிறார்.

Akash, Bala, Chandru and Daniel are partners in a firm. There is no partnership deed. How will you deal with the following ?

(i) Akash has contributed maximum capital. He demands interest on capital at 10% per annum.

(ii) Akash demands the profit to be shared in the capital ratio. But, others do not agree.

(iii) Loan advanced by Chandru to the firm is ₹ 50,000. He demands interest on loan @ 12% per annum.

**33.** ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு :

2015 : ₹ 15,000 ; 2016 : ₹ 17,000 ; 2017 : ₹ 6,000 (நட்டம்) ; 2018 : ₹ 14,000

4 ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

The profits and losses of a firm for the last four years were as follows :

2015 : ₹ 15,000 ; 2016 : ₹ 17,000 ; 2017 : ₹ 6,000 (Loss) ; 2018 : ₹ 14,000

You are required to calculate the amount of goodwill on the basis of 5 years purchase of average profits of the last 4 years.

**34.** கூட்டாளி சேர்க்கும் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை ?

What are the adjustments required at the time of admission of a partner ?

**35.** தியாக விகிதத்திற்கும் ஆதாய விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

Distinguish between sacrificing ratio and gaining ratio.

**36.** ராஜன் நிறுமம் ₹ 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை ஜெகன் நிறுவனத்திடம் இருந்து வாங்கியது. அது பங்கொன்று ₹ 10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப் பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. கீழ்க்கண்ட நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

(ii) பங்குகளை 50% முனைமத்தில் வெளியிட்டால்

Rajan Ltd. purchased machinery of ₹ 6,00,000 from Jagan Traders. It issued equity shares of ₹ 10 each fully paid in satisfaction of their claim. What entries will be made if such issue is made ?

(i) shares issued at par.

(ii) at a premium of 50%.

**37.** மரியா மற்றும் கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து 2019 மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| **விவரம்** | **மரியா நிறுமம்** | **கலா நிறுமம்** |
|---|---|---|
| | ₹ | ₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | 2,00,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 70,000 | 1,20,000 |

From the following particulars of Maria Ltd. and Kala Ltd., prepare common-size income statement for the year ended 31st March 2019.

| **Particulars** | **Maria Ltd.** | **Kala Ltd.** |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Revenue from operations | 1,00,000 | 2,00,000 |
| Other income | 10,000 | 30,000 |
| Expenses | 70,000 | 1,20,000 |

**38.** பின்வரும் தகவல்களிலிருந்து புற அக பொறுப்புகள் விகிதத்தை கணக்கிடவும்.

**31.03.2018 அன்றைய இருப்பு நிலைக் குறிப்பு (வருவிய)**

| விவரம் | ₹ |
|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. பங்குதாரர் நிதி | |
| (அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்குகள் | 1,00,000 |
| (ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 60,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் : | |
| நீண்டகால கடன்கள் (கடனீட்டுப் பத்திரங்கள்) | 80,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் : | |
| (அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 50,000 |
| (ஆ) இதர நடப்புப் பொறுப்புகள் கொடுபட வேண்டிய செலவுகள் | 30,000 |
| **மொத்தம்** | 3,20,000 |

From the following information calculate debt equity ratio.

**Balance Sheet (Extract) as on 31.03.2018**

| **Particulars** | ₹ |
|---|---|
| **I. Equity and Liabilities** | |
| 1. Shareholder's Funds | |
| (a) Share capital | |
| Equity share capital | 1,00,000 |
| (b) Reserves and surplus | 60,000 |
| 2. Non-Current liabilities :<br>Long-term borrowings (Debentures) | 80,000 |
| 3. Current liabilities : | |
| (a) Trade payables | 50,000 |
| (b) Other current liabilities<br>Outstanding expenses | 30,000 |
| **Total** | 3,20,000 |

**39.** கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு வரைக.
Write a brief note on Accounting Vouchers.

**40.** பின்வரும் விவரங்கள் மார்த்தாண்டம் பெண்கள் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | | ₹ |
|---|---|---|
| 1.4.2018 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | : | 32,000 |
| அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் | : | 1,68,000 |
| அவ்வாண்டில் பழைய விளையாட்டுப் பொருள்கள் விற்றது | : | 1,000 |
| 31.3.2019 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு | : | 20,000 |

How will the following appear in the final accounts of Marthandam Women Cultural Association ?

| | | ₹ |
|---|---|---|
| Stock of sports materials on 1.4.2018 | : | 32,000 |
| Sports materials purchased during the year | : | 1,68,000 |
| Sale of old sports materials during the year | : | 1,000 |
| Stock of sports materials on 31.3.2019 | : | 20,000 |

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2017 ஏப்ரல் 1 அன்று பற்பல கடனீந்தோர் | 75,000 |
| 2017 ஏப்ரல் 1 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 |
| கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | 3,70,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு செலுத்தியது | 1,00,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 |
| ரொக்க கொள்முதல் | 3,20,000 |
| 2018 மார்ச் 31 அன்று கடனீந்தோர் | 50,000 |
| 2018 மார்ச் 31 அன்று செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 |

**அல்லது**

(ஆ) அருணன் நிறுமத்தின் 31.03.2019 -ஆம் நாளைய பின்வரும் இருப்பு நிலைக் குறிப்பிலிருந்து :

(i) புற அக பொறுப்புகள் விகிதம்

(ii) உரிமையாளர் விகிதம் மற்றும்

(iii) முதல் உந்துதிறன் விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| **I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. பங்குதாரர் நிதி | |
| (அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்கு முதல் | 1,50,000 |
| 8% முன்னுரிமைப் பங்கு முதல் | 2,00,000 |
| (ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 1,50,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | |
| நீண்ட காலக் கடன்கள் (9% கடனீட்டு பத்திரங்கள்) | 4,00,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) வங்கியிலிருந்து பெற்ற குறுகிய கால கடன்கள் | 25,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 75,000 |
| **மொத்தம்** | 10,00,000 |
| **II. சொத்துகள்** | |
| 1. நீண்டகாலச் சொத்துகள் | |
| நிலைச் சொத்துகள் | 7,50,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | |
| (அ) சரக்கிருப்பு | 1,20,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 1,00,000 |
| (இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 27,500 |
| (ஈ) இதர நடப்பு சொத்துகள் : | |
| செலவுகளை முன்கூட்டிச் செலுத்தியது | 2,500 |
| **மொத்தம்** | 10,00,000 |

(a) From the following particulars calculate total purchases.

| Particulars | ₹ |
|---|---|
| Sundry creditors on 1st April, 2017 | 75,000 |
| Bills payable on 1st April, 2017 | 60,000 |
| Paid cash to creditors | 3,70,000 |
| Paid for bills payable | 1,00,000 |
| Purchases returns | 15,000 |
| Cash purchases | 3,20,000 |
| Creditors on 31st March, 2018 | 50,000 |
| Bills payable on 31st March, 2018 | 80,000 |

**OR**

(b) From the following Balance Sheet of Arunan Ltd. as on 31.03.2019. Calculate

(i) Debt-equity ratio

(ii) Proprietary ratio and

(iii) Capital gearing ratio

| Particulars | ₹ |
|---|---|
| **I. Equity and Liabilities** | |
| 1. Shareholder's funds | |
| (a) Share capital | |
| Equity share capital | 1,50,000 |
| 8% preference share capital | 2,00,000 |
| (b) Reserves and surplus | 1,50,000 |
| 2. Non-current liabilities | |
| Long-term borrowings (9% Debentures) | 4,00,000 |
| 3. Current liabilities | |
| (a) Short-term borrowings from banks | 25,000 |
| (b) Trade payables | 75,000 |
| **Total** | 10,00,000 |
| **II. Assets** | |
| 1. Non-current assets<br>Fixed Assets | 7,50,000 |
| 2. Current assets | |
| (a) Inventories | 1,20,000 |
| (b) Trade receivables | 1,00,000 |
| (c) Cash and cash equivalents | 27,500 |
| (d) Other current assets | |
| Expenses paid in advance | 2,500 |
| **Total** | 10,00,000 |

**42.** (அ) தமிழ் கல்வியியல் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019 மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.4.2018) | 18,000 | கட்டடம் வாங்கியது | 2,10,000 |
| வாடகை செலுத்தியது | 6,000 | பணியாளர் சம்பளம் | 55,000 |
| உதவித் தொகை அளித்தது | 15,200 | சந்தா பெற்றது | 2,65,000 |
| நுழைவுக் கட்டணம் பெற்றது | 18,500 | | |

**அல்லது**

(ஆ) ஆகாஷ், முகேஷ் மற்றும் சஞ்சய் என்ற கூட்டாளிகள் 3 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2017 மார்ச் 31 அன்று அவர்களுடைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | கட்டடம் | 1,10,000 |
| ஆகாஷ் | 40,000 | | வாகனம் | 30,000 |
| முகேஷ் | 60,000 | | சரக்கிருப்பு | 26,000 |
| சஞ்சய் | 30,000 | 1,30,000 | கடனாளிகள் | 25,000 |
| இலாபநட்ட பகிர்வு க/கு | | 12,000 | கைரொக்கம் | 15,000 |
| பொதுக் காப்பு | | 24,000 | | |
| தொழிலாளர் ஈட்டுநிதி | | 18,000 | | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 22,000 | | |
| | | 2,06,000 | | 2,06,000 |

பகிர்ந்து தரா இலாபம், பொதுக் காப்பு மற்றும் தொழிலாளர் ஈட்டுநிதி போன்றவற்றை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டு பதிவுகள் தருக. மேலும் கூட்டாளிகளின் முதல் கணக்கை தயாரிக்கவும்.

(a) From the following particulars of Tamil Educational Society, prepare Receipts and Payments accounts for the year ended 31st March, 2019.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Opening cash balance as on 1.4.2018 | 18,000 | Building purchased | 2,10,000 |
| Rent paid | 6,000 | Staff salary | 55,000 |
| Scholarship given | 15,200 | Subscription received | 2,65,000 |
| Entrance fees received | 18,500 | | |

**OR**

(b) Akash, Mugesh and Sanjay are partners in a firm sharing profits and losses in the ratio of 3 : 2 : 1. Their balance sheet as on 31st March, 2017 is as follows :

| Liabilities | ₹ | ₹ | Assets | ₹ |
|---|---|---|---|---|
| Capital accounts : | | | Buildings | 1,10,000 |
| Akash | 40,000 | | Vehicle | 30,000 |
| Mugesh | 60,000 | | Stock in trade | 26,000 |
| Sanjay | 30,000 | 1,30,000 | Debtors | 25,000 |
| Profit and Loss appropriation A/c | | 12,000 | Cash in hand | 15,000 |
| General reserve | | 24,000 | | |
| Workmen compensation fund | | 18,000 | | |
| Bills payable | | 22,000 | | |
| | | 2,06,000 | | 2,06,000 |

Pass journal entry to transfer accumulated profit general reserve and workmen compensation fund and prepare the capital account of the partners.

**43.** (அ) பின்வரும் விவரங்களில் இருந்து உயர் இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | பயன்படுத்தப்பட்ட முதல் | : | ₹ 2,00,000 |
| (ii) | சாதாரண இலாப விகிதம் | : | 15% |
| (iii) | வியாபாரத்தின் சராசரி இலாபம் | : | ₹ 42,000 |

**அல்லது**

(ஆ) ஜாய் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது ₹ 5, ஒதுக்கீட்டின் போது ₹ 3, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 2 செலுத்தும் வகையில் வெளியிடப்பட்டது. 9,000 பங்குகளை வாங்க பொது மக்கள் விண்ணப்பித்துள்ளனர். இயக்குநர்கள் 9,000 பங்குகளையும் ஒதுக்கீடு செய்து அதற்கான தொகையையும் பெற்றுக் கொண்டனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

(a) From the following information, calculate the value of goodwill based on 3 years purchase of super profit.

| | | | |
|---|---|---|---|
| (i) | Capital employed | : | ₹ 2,00,000 |
| (ii) | Normal rate of return | : | 15% |
| (iii) | Average profit of the business | : | ₹ 42,000 |

**OR**

(b) Joy company issued 10,000 equity shares at ₹ 10 per share payable ₹ 5 on application, ₹ 3 on allotment and ₹ 2 on first and final call. The public subscribed for 9,000 shares. The directors allotted all the 9,000 shares and duly received the money. Pass the necessary journal entries.

**44.** (அ) பின்வரும் மலர் நிறுமத்தின் 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 -ஆம் நாளைய ஒப்பீட்டு இருப்பு நிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016 மார்ச் 31 ₹ | 2017 மார்ச் 31 ₹ |
|---|---|---|
| I. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| (அ) பங்கு முதல் | 2,00,000 | 2,50,000 |
| (ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 50,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | | |
| நீண்ட காலக் கடன்கள் | 30,000 | 60,000 |
| 3. நடப்பு பொறுப்புகள் | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 20,000 | 60,000 |
| **மொத்தம்** | 3,00,000 | 4,20,000 |
| II. **சொத்துகள்** | | |
| 1. நீண்டகாலச் சொத்துகள் | | |
| (அ) நிலைச் சொத்துகள் | 1,00,000 | 1,50,000 |
| (ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 | 75,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| சரக்கிருப்பு | 75,000 | 1,50,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 75,000 | 45,000 |
| **மொத்தம்** | 3,00,000 | 4,20,000 |

**அல்லது**

(ஆ) ஊட்டி மனமகிழ் மன்றத்தின் பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கை தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு : | | விளையாட்டுப் பொருள்கள் | |
| கை ரொக்கம் | 5,000 | வாங்கியது | 10,000 |
| வாடகை பெற்றது | 10,000 | எழுது பொருளுக்காக செலுத்தியது | 7,000 |
| முதலீடுகள் விற்றது | 8,000 | கணிப்பொறி வாங்கியது | 25,000 |
| சந்தா பெற்றது | 54,000 | சம்பளம் | 20,000 |
| | | இறுதி இருப்பு | |
| | | கை ரொக்கம் | 15,000 |
| | 77,000 | | 77,000 |

(a) From the following particulars, prepare comparative balance sheet of Malar Ltd. as on 31st March, 2016 and 31st March, 2017.

| **Particulars** | **31st March, 2016** ₹ | **31st March, 2017** ₹ |
|---|---|---|
| **I. Equity and Liabilities** | | |
| 1. Shareholder's fund | | |
| (a) Share capital | 2,00,000 | 2,50,000 |
| (b) Reserves and surplus | 50,000 | 50,000 |
| 2. Non-current liabilities | | |
| Long-term borrowings | 30,000 | 60,000 |
| 3. Current liabilities | | |
| Trade payables | 20,000 | 60,000 |
| **Total** | 3,00,000 | 4,20,000 |
| **II. Assets** | | |
| 1. Non-current assets | | |
| (a) Fixed assets | 1,00,000 | 1,50,000 |
| (b) Non-current investments | 50,000 | 75,000 |
| 2. Current assets | | |
| Inventories | 75,000 | 1,50,000 |
| Cash and cash equivalents | 75,000 | 45,000 |
| **Total** | 3,00,000 | 4,20,000 |

**OR**

(b) From the following Receipts and Payment Account of Ooty Recreation Club, prepare income and expenditure account for the year ended 31.03.2018.

| **Receipts** | ₹ | **Payments** | ₹ |
|---|---|---|---|
| To opening balance Cash in hand | 5,000 | By sports materials purchased | 10,000 |
| To rent received | 10,000 | By stationery paid | 7,000 |
| To sale of investments | 8,000 | By computer purchased | 25,000 |
| To subscription received | 54,000 | By salaries | 20,000 |
| | | By closing balance Cash in hand | 15,000 |
| | 77,000 | | 77,000 |

**45.** (அ) ஸ்ரீராம் மற்றும் ராஜ் எனும் கூட்டாளிகள் முறையே 2 : 1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 1.4.2017 அன்று நெல்சன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(i) சரக்கிருப்பு மதிப்பை ₹ 5,000 உயர்த்த வேண்டும்.

(ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ₹ 7,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும்.

(iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹ 10,000 குறைக்க வேண்டும்.

(iv) கொடுபடாமலுள்ள கூலி ₹ 9,500 -க்கு வகை செய்ய வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கை தயாரிக்கவும்.

**அல்லது**

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 60,000 | உள் திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019 மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019 மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

(a) Sriram and Raj are partners sharing profits and losses in the ratio of 2 : 1. Nelson joins as a partner on 1$^{st}$ April, 2017.

The following adjustments are to be made :

(i) Increase the value of stock by ₹ 5,000.

(ii) Bring into record investment of ₹ 7,000 which had not been recorded in the books of the firm.

(iii) Reduce the value of office equipment by ₹ 10,000.

(iv) A provision would also be made for outstanding wages for ₹ 9,500.

Give journal entries and prepare revaluation account.

**OR**

(b) From the following particulars, calculate total sales.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Debtors on 1st April 2018 | 2,50,000 | Bills receivable dishonoured | 15,000 |
| Bills receivable on 1st April 2018 | 60,000 | Returns inward | 50,000 |
| Cash received from debtors | 7,25,000 | Bills receivable on 31st March 2019 | 90,000 |
| Cash received for bills receivable | 1,60,000 | Sundry debtors on 31st March 2019 | 2,40,000 |
| Bad debts | 30,000 | Cash sales | 3,15,000 |

**46.** (அ) (i) கயல், மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையே உள்ள புதிய இலாப பகிர்வு விகிதம் 3 : 2 ஆதாய விகிதத்தை கணக்கிடவும்.

(ii) சுனில், சுமதி மற்றும் சுந்தரி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 3 : 3 : 4 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். சுந்தரி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார் மற்றும் அவருடைய பங்கு முழுவதையும் சுனில் எடுத்துக் கொள்கிறார். புதிய இலாப பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

**அல்லது**

(ஆ) யாஸ்மின் மற்றும் சக்தி நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து பொதுஅளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

| விவரம் | யாஸ்மின் நிறுமம் ₹ | சக்தி நிறுமம் ₹ |
|---|---|---|
| **I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| (அ) பங்கு முதல் | 2,00,000 | 3,00,000 |
| (ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 60,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | | |
| நீண்டகாலக் கடன்கள் | 1,50,000 | 1,80,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 1,00,000 | 60,000 |
| **மொத்தம்** | 5,00,000 | 6,00,000 |
| **II. சொத்துகள்** | | |
| 1. நீண்டகாலச் சொத்துகள் | | |
| (அ) நிலைச் சொத்துகள் | 2,00,000 | 3,00,000 |
| (ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 | 1,20,000 |
| 2. நடப்புச் சொத்துகள் | | |
| சரக்கிருப்பு | 2,00,000 | 90,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 50,000 | 90,000 |
| **மொத்தம்** | 5,00,000 | 6,00,000 |

(a) (i) Kayal, Mala and Neela are partners sharing profits in the ratio of 2 : 2 : 1. Kayal retires and the new profit sharing ratio between Mala and Neela is 3 : 2. Calculate the gaining ratio.

(ii) Sunil, Sumathi and Sundari are partners sharing profits in the ratio of 3 : 3 : 4. Sundari retires and her share is taken up entirely by Sunil. Calculate the new profit sharing ratio and gaining ratio.

**OR**

(b) Prepare common-size statement of financial position for the following particulars of Yasmin Ltd. and Sakthi Ltd.

| **Particulars** | **Yasmin Ltd.** ₹ | **Sakthi Ltd.** ₹ |
|---|---|---|
| **I. Equity and Liabilities** | | |
| 1. Shareholder's fund | | |
| (a) Share capital | 2,00,000 | 3,00,000 |
| (b) Reserves and surplus | 50,000 | 60,000 |
| 2. Non-current liabilities | | |
| Long-term borrowings | 1,50,000 | 1,80,000 |
| 3. Current liabilities | | |
| Trade payables | 1,00,000 | 60,000 |
| **Total** | 5,00,000 | 6,00,000 |
| **II. Assets** | | |
| 1. Non-current assets | | |
| (a) Fixed assets | 2,00,000 | 3,00,000 |
| (b) Non-current investments | 50,000 | 1,20,000 |
| 2. Current assets | | |
| Inventories | 2,00,000 | 90,000 |
| Cash and cash equivalents | 50,000 | 90,000 |
| **Total** | 5,00,000 | 6,00,000 |

**47.** (அ) முகேஷ் நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்

**முகேஷ் நிறுமத்தின் இலாபநட்ட அறிக்கை.**

| விவரம் | தொகை ₹ |
|---|---|
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,50,000 |
| II. இதர வருமானம் | |
| முதலீடு மூலம் வருவாய் | 20,000 |
| III. மொத்த வருவாய் (I+II) | 2,70,000 |
| IV. செலவுகள் : | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 90,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 10,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 15,000 |
| இதர செலவுகள் | 55,000 |
| வரி ஒதுக்கு | 25,000 |
| மொத்த செலவுகள் | 1,95,000 |
| V. அவ்வாண்டிற்கான இலாபம் | 75,000 |

**அல்லது**

(ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

(a) From the following statement of profit and loss of Mukesh Ltd. Calculate,

(i) Gross profit ratio

(ii) Net profit ratio

**Statement of Profit and Loss**

| **Particulars** | **Amount ₹** |
|---|---|
| I. Revenue from operations | 2,50,000 |
| II. Other income : | |
| Income from investment | 20,000 |
| III. Total revenues (I + II) | 2,70,000 |
| IV. Expenses : | |
| Purchase of stock in trade | 90,000 |
| Charges in inventories | 10,000 |
| Expenses on Employee benefits | 15,000 |
| Other expenses | 55,000 |
| Provision for Tax | 25,000 |
| Total Expenses | 1,95,000 |
| V. Profit for the year | 75,000 |

**OR**

(b) Explain any five applications of computerised accounting systems.

- o O o -